# சூயஸ் காலவாயில் இஸ்ரேல் படைகள்

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 9

தபாற் பெட்டி எண் : 49 இதழ் 117
போன் 489 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 25 ஸபர் 28 வியாழக்கிழமை [8-6-67]

## பழைய ஜெரூசலம் வீழ்ச்சியுற்றது

லண்டன், ஜூன் 7

இஸ்ரேலிய படைகள் சூயஸ் கால்வாயை அடைந்து விட்டதாக கடைசியாகக் கிடைத்த ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன. ஆனல் இஸ்ரேலிய படைகள் சூயஸ்கல்வாய்க்கு 20 மைல்தொலைவு வரை முன்னேறியிருப்பதாக முன்னர் கிடைத்த

செய்திகள் தெரிவித்தன

ஜோர்டானிலுள்ள பழைய ஜெருசலம் நகரை இஸ்ரேல் படைகள் கைப்பற்றிவிட்டதாக அறிவிக்கப் பட்டது [8-ம் பக்கம்பார்க்க]

# போர் நிறுத்த யோசனைக்கு மூன்று அரபு நாடுகள் மறுப்பு

## 'சாகும் வரை போராடுங்கள்' ஜோர்டான் மன்னர் அறைகூவல்

### பாதுகாப்பு சபை மீண்டும் கூடுகின்றது

நியூயோர்க் ஜூன் 7

உடனடியாக யுத்தநிறுத்தம் செய்யும்படி ஐ நா பாதுகாப்புசபை விடுத்த கோரிக்கையை ஐக்கியஅரபுக்குடியரசும் ஈராக்கும் சிரியாவும் இன்று நிராகரித்துவிட்டன இஸ்ரேல் இருக்கும்வரை தொடர்ந்து போராடுவோம் என்று ஐக்கியஅரபுக்குடியரசு அறிவித்துள்ளது

இஸ்ரேலுடன் போர்நிறுத்தபேச்சுவார்த்தைகள் நடத்த ஜோர்டான் சம்மதம் தெரிவித்திருந்தபோதும் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருவதால் தாமும் போர்புரிவதென ஜோர்டான் அறிவித்துள்ளது. ஜோர்டான் மன்னர் குசேன் மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் 'சாகும்வரை போராடுங்கள்' என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நிலைமையில் ஐ. நா. பாதுகாப்புசபை மீண்டும் கூடவேண்டும் என்று ரஷ்யா விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து நாளைய தினம் பாதுகாப்புசபை மீண்டும் அவசரமாகக் கூடவிருக்கின்றது.

## இஸ்ரேல் படைகள் ஓட்டம்

சிரியா எல்லையில் இஸ்ரேல் படைகளை சிரியா வீரர்கள் நாஸரத்நகரை நோக்கித் துரத்திச்செல்கின்றனர். சவூதி அரேபியாவும், லிபியாவும் அரபு நாடுகளுக்கு எதிரான நாடுகளுக்கு எண்ணெய் கொடுப்பதில்லையென்று முடிவுசெய்துள்ளன.

## இஸ்ரேலிடம அரபுநகர் வீழ்ச்சி

அக்காபா வளைகுடாவுக்குள் இறங்கும் முகத்திலுள்ள ஒரு முக்கிய அரபு நகர் இஸ்ரேலிடம் வீழ்ச்சியுற்றதாக ஒரு செய்தி கூறுகின்றது.

ஜோர்டான் தாக்குதலின்போது மூடப்பட்டிருந்த டெல் அவிவ் விமான நிலையத்தை மீண்டும் சிவில் போக்குவரத்துக்கு இஸ்ரேல் திறந்துவிட்டிருக்கின்றது.

காசியாவிலுள்ள ஐ. நா. படையிலுள்ள இந்திய போர்வீரர்களை அப்புறப்படுத்துவது பற்றி ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் ஏற்பாடு செய்து வருகின்ருர்.

## இந்தியா நமபிக்கை

மேற்கு ஆசியாவில் உடனடியாக யுத்தநிறுத்தம் ஏற்பட வேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புச்சபை நிறைவேற்றிய தீர்மானம் நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறதென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இந்திய பார்லிமெண்டின்மேல்சபையில் இன்று தெரிவித்தார்.

## மறுப்பை நிராகரித்தது

ஜோர்டான், சிரியாமீது இஸ்ரேலிய விமானங்களும் தரைப்படைகளும் தாக்கிய போது அதற்கு பிரிட்டனும் அமெரிக்காவும் உதவியளித்ததாகவும் அமெரிக்க விமானங்கள் இஸ்ரேலியருக்கு வானப் பாதுகாப்பு அளித்ததாகவும் ஐக்கியஅரபுக் குடியரசு தெரிவித்த குற்றச்சாட்டுகளை பிரிட்டனும் அமெரிக்காவும் மறுத்தன. ஆனல் இந்த மறுப்பை ஐக்கியஅரபுக் குடியரசு ஏற்றுக் கொள்ள மறுத்து நிராகரித்துவிட்டது. பிரிட்டிஷ், அமெரிக்க போர் விமானங்கள் உதவியளித்ததென்பதை நிரூபிக்க தங்களிடம் ஆதாரமிருப்பதாக அரபுக் குடியரசு அதிகாரிகள் தெரிவித்தனர். மத்தியதரைக் கடலில் நிற்கும் அமெரிக்க ஆறுவது கடற்படையைச் சேர்ந்த விமானம் தாங்கிக் கப்பலொன்றின்மீது இஸ்ரேலிய அடையாளமுள்ள அமெரிக்கப் போர் விமானங்கள் இருந்ததற்கு புகைப்படங்கள்மூலம் ஆதாரம் காட்ட முடியுமென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சூடானுக்கு ரஷ்யா ஆயுதம்

அமெரிக்காவுடனிருந்து வந்த ராஜீய உறவுகளை முறித்துக் கொள்ள சூடான் முடிவு செய்ததைத் தொடர்ந்து சூடானுக்கு ஆயுத உதவியளிக்க சோவியத் யூனியனும் செக்கோஸ்லவாக்கியாவும் முன்வந்துள்ளன. அரபு நாடுகளுக்கு உதவியளிக்க வடகொரியாவும் முன்வந்திருக்கிறது. இஸ்ரேலுக்கு அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்கள் சண்டையின்போது

[8-ம் பக்கம் பார்க்க]

## சமாதான முயற்சிகள்

பாரிஸ், 7

அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரை நிறுத்த முயற்சி மேற்கொள்ளுமாறு ரஷ்யப் பிரதமர் கோஸிஜினை பிரெஞ்சு ஜனதிபதி டிகோல் கேட்டுக்கொண்டிருக்கிருர். போர் ஆரம்பமான தினத்திலிருந்து டிகோல் கொஸிஜினுடன் அடிக்கடி தொடர்புகொண்டிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஃஃஃ

புதுடில்லி, ஜூன் 7

இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள போரை நிறுத்திச் சமாதானத்தை நிலைநாட்டும்வகையிலான முயற்சியை எடுக்குமாறு பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை இஸ்ரேல் பிரதமர் எஷ்கோல் கேட்டுள்ளார்.

## நிதிமந்திரி வன்னிநாயக்கா 15-ல் யாழ்ப்பாணம வருகிருர்

யாழ்ப்பாணம், வியா.

நிதிமந்திரி திரு. யூ. பி. வன்னிநாயக்காவும், உதவி சுகாதார மந்திரி திருமதி விமலா கன்னங்கராவும் இம்மாதம் 15ம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்ருர்கள். அன்றையதினம் நடைபெறவிருக்கும் தேசிய அரசாங்க சுகாதார சேவையாளர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டே அவர்கள் வரவிருக்கிருர்கள்.

யாழ்ப்பாண மாநகர

[8-ம் பக்கம் பார்க்க]

## பிரதமர் கெய்ரோ போகமாட்டார்

கொழும்பு, புதன்

கனடா, ஜப்பான், ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த பிரதமமந்திரி திரு. டட்லிசேனநாயகா தமது விஜயத்தை ஒத்திவைத்திருக்கின்ருர்.

இதனல் பிரதமமந்திரியின் கெய்ரோ விஜயமும் நடைபெருது.

ஓம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிலவங்க ஆு வைகாசி மீ 26-ம் திகதி [9-6-67] வெள்ளிக்கிழமை காலை 7 மணிமுதல் 10-00 மணிவரையுள்ள கற்கடக லக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரன் திருநிறைசெல்வன்
இராசரத்தினம் அவர்களுக்கும்
[ஆ. இராசையா&சன்ஸ், யாழ்ப்பாணம்]

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
சோதிமலர் அவர்களுக்கும்

திருவருள் நலங்கொண்டு நடைபெறவிருக்கும் திருமணவிழாவில் தாங்களும் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதராய் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்ருேம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

ஆ. இராசையாவும் பாரியாரும்
''இந்திரா தேவிவாசம்'',
10, சுந்தரர் ரோட், நல்லூர்-யாழ்ப்பாணம்.
[ஆ. இராசையா அன் சன்ஸ், மருந்துக்கடை,
69, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்]

மு. செல்லத்துரையும் பாரியாரும்
111, பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

2324

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம

### பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்றிக் கோர்ட்டில்

சாவகச்சேரி தெற்கு சின்னட்டியர் தம்பு வழக்காளி

இல.2966/P எதிராக

1.வண்ணுர்பண்ணை வடமேற்கு நல்லதம்பி கந்தையா

2. இறந்த சாவகச்சேரி வடக்கு நல்லதம்பி தாமோதரம்பிள்ளை

3. சாவகச்சேரி தெற்கு அருணுசலம் செல்லையா அல்லது பொன்னம்பலமும்

4.பெண் சரஸ்வதியும்

5 பராயமற்றசெல்லையா மகள் சிவபாக்கியம். இவளது மாதா 6-ம்எதிரிபாதுகாவலர்

6. சாவகச்சேரி தெற்கு செல்லையா கைம்பெண் பாறுபதிப்பிள்ளை.

7 தாமோதரம்பிள்ளை கைம்பெண் பொன்னம்மா

8. தாமோதரம்பிள்ளை சிவானந்தன்.

9. தாமோதரம்பிள்ளை இராசேந்திரன்

10. தாமோதரம்பிள்ளை செல்வேந்திரன்- 8-10ம்எதிராளிகள்பராயமற்றவர்கள். அவர்களின் மாதா 7ம் எதிரி பராபரிப்புக்காரி. இவர்கள் இறந்த 2ம் எதிரியின் உரித்தாளராக கூட்டுச்சேர்க்கப்பட்டனர்.எதிரிகள்.

கிராமசேவகர்/பிஸ்கால்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் கரைச்சிப் பகுதி கரைச்சிப்பற்று குஞ்சுப்பரந்தன்.

இறை

கொல்லனுறுவயல் நெ. பர. 150 எல்லை கிழக்கு தாமுவல்லிபுரத்துக்கும் பங்காளருக்கு முரியவாதனம் வடக்கு விஞசித்தம்பி வல்லிபுரத்துக்கும வடகரை வேதாரணியேஸ்வரன் கோவிலுக்கு முரியவாதனம் மேற்கு ஆறுமுகம் பெண் சிதம்பரனுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம் தெற்கு முருகேசு கந்தையாவுக்குரிய வாதனம் இதடங்கலும் என்னும் ஆதனம்/1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1967-ம் ஞு ஆனி மீ 18-ம் வ 10 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள். இக்காணியில் வேறு யாருக்கேனும் நயமுரித்துச் சொந்தை இருப்பின் அத்திகதி கோட்டில் வெளிப்படும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கோட்டாரின்
கட்டளைப்படி

2326

வியாபாரம பெருக
விளம்பரம செய்க

### அறிவித்தல்

நல்லூர் கந்தனைத் தரிசிக்க வரும் பக்தகோடியினரின் உறைவிடமாகவும் அன்னதானம் வழங்கி ஆறுதலையும் மடமாகவும் அனேக வருஷங்களாகவிளங்கிய ''மாணிக்க மணியகாரன் மடம்'' ஓர் தர்மசாதன மடம்.

இம்மடம் காலஞ்சென்ற மாணிக்க மணியகாரனல் தர்ம சாதனம் செய்யப்பட்டு பரம்பரை பரம்பரையாக மேற்படி கைங்கரியத்தில் ஈடுபட்டுவந்த ஓர் கட்டிடம்.

இற்றைக்கு நூறு வருஷங்களுக்கு முன்தொட்டு அன்னதான மடமாகவும் பக்தர்களுக்கு ஆறுதலளிக்கும் மடமாகவும் விளங்கிய இம்மடத்தை, தற்போது இலங்கை நீர்ப்பாசன இலாகாவில் உத்தியோகம் வகிக்கும் நல்லூர் கனகசபை சிவசுப்பிரமணியம் என்பவர் அழித்து ஐந்து அறைகள் கட்டி அவைகளை வாடகைக்குக் கொடுத்துப் பணம் வசூலித்து வருகின்றுர் என்பதை, நல்லூர் கந்தனைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கும் ஏனைய பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன். அத்துடன் நான் மேற்படி காலஞ்சென்ற மாணிக்க மணியகாரரின் நேர்வழித்தோன்றல் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாணிக்கவாசகர்
துரைராசசிங்கம்,

பற்கட்டுமிடம்,
19, பிரதான வீதி,
யாழ்ப்பாணம், 2322

### விளம்பரம்

சரசாலை வடக்கு ப. நோ. கூ. சங்கத்திற்கு ஓர் மனேஜர் தேவை.

**தகமைகள்**

கூட்டுறவுப் பயிற்சி உள்ளவராயிருத்தல் வேண்டும்.

பிணைப்பணம் ரூபா 1000/-

உறுதிப்பிணை ரூபா 2000/- கட்டுதல் வேண்டும்.

வேதனம் ரூபா 100 வழங்கப்படும். விண்ணப்பம் 20-6-67 க்கு முன் சங்கச் செயலாளருக்கு அனுப்பவும். 2320

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியா. கோப்பாய் கிராமசபை லிகிதராகக் கடமையாற்றும் திரு. எம். ஏ. அலோஷியஸ் அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

''ஈழநாடு'' பத்திரிகையில் வெளியாகும் விளம்பரங்களுக்கு அதன் நிர்வாகிகள் எவ்வித பொறுப்பும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். விளம்பரம் செய்பவர்களே எதற்கும் முழுப்பொறுப்பாளிகள்.

### தேவை

வட்டுச்சிவன் ஐக்கிய பண்டகசாலைக்கு பயிற்சியுள்ள ஒரு மனேச்சர் தேவை.

காசுப்பிணை ரொக்கம் 1000/-

ஆதனப்பிணை 2000/-

சம்பளம் ரூபா 100/-

தராதரப் பத்திரங்களுடன் 12-6-67 க்கு முன், சங்கக்காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி,
வ. சி. ஐ. பண்டகசாலை,
வட்டுக்கோட்டை.
7-6-67.

2329

### கேள்வி விளம்பரம்

புலோப்பளைக்கிராமசபை அக்கிராசனரால் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் வேலைகளைச் செய்வதற்குசீல்வைத்த கேள்விகள் பதிவுத் தபால் மூலம் 20-6-67 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் ரெண்டர் பிணைப்பணமாக ரூபா 50-00-ம் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 5-00-ம் கட்ட வேண்டும். கேள்விப் பத்திரப் பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது. கேள்விப்பத்திரம் 19-6-67 பகல் 12 மணி வரையும் வழங்கப்படும்.

வேலையின் விபரம்.

1.குணத்தான்பள்ள றேட்டு அமைத்தல்.

[ஒப்பம்]
அ. யோ. இராசசூரியர்,
கி. ச. தலைவர்,
புலோப்பளை.

புலோப்பளை கிராமசபை,
பளை,
6-6-67.

2327

### கல்வி

வகுப்புகள்:

ஜீ-ஏ. கியு, ஜி. ஸி. ஈ. உயர்/சாதாரண தரங்கள் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், சிங்களம் ஆகிய வகுப்புகள் காலை மாலை நடைபெறுகின்றன. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியுட்டோறியல் கல்லூரி [Jaffna Tutorial College], கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர்/நெல்லியடி, கரவெட்டி. 1886

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோழிகள்!

கேரும் பேடு ரூபா15/- கூவும் சேவல் ரூபா6/- ஒரு மாசப்பேடு ரூபா4/-முட்டை தாங்கி[EggTray] -/75சதம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1883

காணி:

யாழ்ப்பாணம் இந்து மகளிர் பாடசாலைக்கு சமீபத்தில் வீடுகட்ட கைத்தொழிற்சாலை நிறுவ சிறந்த இடம் 27 பரப்பு வரையில் சிறு துண்டுகளாகக் கொடுக்கலாம். விலை விபரங்களுக்கு எழுதுக.V.K.S. 64, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1896

காணி!

கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் உள்ளதோட்டச்செய்கைத்தறை ஐம்பது பரப்பு வற்ருக்கிணறு மோட்டாருடன் விற்பனைக்கு இருக்கிறது. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும் த பொன்னம்பலம், அம்மன் கோயில்றேட்டு, கிழக்குக் கொக்குவில். 1898

புத்தகம்!

G.C,E. பரீட்சைக்கும்ஏனைய கணக்கியற் பரீட்சைகளுக்கும், வர்த்தக ஆசிரிய பிரவேச பரீட்சைக்கும் வழிகாட்டி கணக்கியல்—1 முடிவுக் கணக்குகள் FINAL-ACCOUNTS. ஆசிரியர்: வை. சி.சிவஞானம் விசேட ஆசிரியர் பயிற்சி (வர்த்தகம்) விளக்கங்கள்-135 முடிவுக் கணக்குப் பயிற்சிகள்-விடைகள் அடங்கிய நூல். விலை ரூபா:4-50. [தபாற்செலவு சதம் 50] எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனைக்குண்டு. வட-இலங்கைத் தமிழ்நூற்பதிப்பகம், சுன்னுகம். 2411

### காணவில்லை

அளவெட்டி வடக்கு அமரசிங்கம் தவமணிதேவியை சென்ற மூன்று வாரங்களாக காணவில்லை. இவர்கள் உற்றுர்மிகவும்கவலையுடன்இருக்கிறுர்கள். புறப்படும் பொழுது வெள்ளைச்சட்டையும் சிவத்தப்பாவாடையும் கழுத்தில் மூன்றரைத் தங்கப்பவுண் சங்கிலியும் அணிந்திருந்தார். பொதுநிறம். வயது பதினேந்து. கண்டவர்கள் சுன்னுகம் பொலிசாரிடம் ஒப்படைத்தால் சன்மானம் ஐம்பதுரூபா வழங்கப்படும்.பொ.கந்தசாமி.1897

### கல்வி

வகுப்புகள்:

அளவெட்டி கணேசன் கல்வி நிலையத்தின் கிளையொன்றை நிர்15, பிரப்பங்குளம்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஸ்தாபித்திருக்கிறேம். G.C.E, சாதாரணம், உயர்தரத்துக்கான வகுப்புகள், விஞ்ஞானம், கலை ஆகிய இரு பிரிவுகளிலும் காலை/மாலை நடாத்தப்படுகின்றன. மற்றும் சிங்களம், வர்த்தக பாடங்கள் ஆங்கிலம் முதலிய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. சேர விரும்புவோர் உடனே சேரவும். 2413

### தேவை

ஆசிரியைகள்:

ஆசிரியைகள் — பணப் பொறுப்பாளர்கள் தேவை. சிறிய உரொக்கப்பிணைசெலுத்தக்கூடியவர்கள் காலை 10 மணிமுதல் மாலை 3-30மணி வரை நேரில் சந்திக்கவும். அதிபர், சிறுவர்பாடசாலை, 422, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 1899

ஆசிரியர்:

நான்கு சிறந்த ஆங்கிலப் பள்ளிக்கூடங்களின் மத்தியில், மூளாய் றேட்டின் முதலாம் கட்டையடி பஸ் நிற்பாட்டும் இடத்துக்கு அருகாமையிலுள்ள ஒரு பெரிய வீட்டில் தையல் வேலை, குழந்தைபராமரிப்பு, டியூஷன் வகுப்புகள் நடத்தும் ஒரு தளபாடங்களுள்ள அகடமியை நடத்துவதற்கு அனுபவமுள்ள, ஓய்வுபெற்ற அல்லதுவேலையற்ற, ஸ்தலத்தில் இருக்கக்கூடிய ஆங்கிலம், அல்லது விஞ்ஞான ஆசிரியர் குடும்பம் தேவை. சகல விபரங்களுடன் விளம்பர இல. 1892 ஈழநாடு மே/பா; யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1892

முகாமையாளர்:

எமதுஸ்தாபனத்தில் முகாமையாளராகக் கடமையாற்ற டிபோசிட் கட்டக்கூடியவர் தேவை. யாழ்.பிரதம ஏஜென்சி 32, பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1885

மனேஜர்:

இமையாணன் ஐக்கியபண்டகசாலைக்கு G.C.E.[சாதா] சித்தியும், கூட்டுறவுப் பயிற்சியும் பெற்ற மனேஜர் தேவை. பிணை; ரொக்கம் ரூ.1000/-ஆதனம்ரூ.2000/- வயது 21—40. சம்பளம்: ரூ. 100/- சகலதும்உட்பட. விற்பனையாளருக்கு: J. S. C. சித்தியும், ரொக்கம் ரூ.500/-ம்சம்பளம்: ரூ.75/- சகலதும்உட்பட விண்ணப்பங்கள் 24-6-67 நண்பகல் 12மணிக்குமுன் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பப் படல்வேண்டும். தலைவர், இமையாணன் ஐ. பண்டகசாலை, சந்தைவீதி, உடுப்பிட்டி. 1900



### 25-ம் வருட மரண ஞாபகம்

''என்னில் விசுவாசமாய் இருப்பவன் நித்தியத்திற்கும்பிழைப்பான்.''
—எம்பெருமான் யேசுவின் திருவாக்கு.—

நெடுந்தீவைச் சேர்ந்தவரும், பிரபல தமிழ் ஆசிரியரும், சித்த வைத்தியரும், நெடுந்தீவு கிழக்கு புனித சவேரியார் ஆலயத்தின் ஆயுட்கால மூப்பரும், வண. T. A. X. தேவதாசன் சுவாமிகள் [மாதகல், கட்டைக்குரு] சங். சகோ R. யோசேப் (திருச்சி) சங். சகோதரிகள் M. சில்வேரியா (றேமாபுரி), மேரி. டோமினிக்கா (பாகிஸ்தான்), பிலோமினு (தோலகட்டி), மேரி லூயிஸ் [றேமாபுரி) ஆகியோரின் பேரனுமான இராமநாதர் யோசேப்பு அவர்கள் பரமபதமடைந்த தினம் 10-6-67 சனிக்கிழமையன்று பூர்த்தியாகிறது. அன்று தினம் காலை 10 மணியளவில் நெடுந்தீவு கிழக்கு புனித சவேரியார் ஆலயத்தில் ஸ்தோத்திரப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் அனைவரும் அன்னரின் மோட்ச மகிமைக்காக நம்முடன் சேர்ந்து ஆண்டவனைத் துதிக்குமாறு வேண்டுகிறேம். இங்ஙனம்

புத்திரர்: யோ. ஞானப்பிரகாசம், யோ. இராயப்பு, யோ. சவிரிமுத்து, திருமதி. அ. திருச்செல்வம், யோ. எட்வேட், யோ. யோண்பிள்ளை, யோ. பாக்கியநாதர், யோ. அருளப்பு. 2330


கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கு

## ஓர் நற்செய்தி

எங்களிடம் குறைந்த செலவில் சிறந்த முறையில் கட்டிடமேல் கூரை இரும்பு வேலைகள், இரும்பு கேட், கிரில்கள், பைப்பிட்டிங், வாட்டர்டேங் [நீர்த்தாங்கி] வெல்டிங், வார்ப்பு வேலைகள், கூரைசீட், ஆணி முதலியவைகள் உடனுக்குடன் குறிப்பிட்ட தவணைக்குள் செய்து கொடுக்கப்படும்.



ஒருமுறை நேரில் எங்களிடம் தொடர்பு கொண்டு உங்களின் ஆதரவை நல்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேம்.

**மகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
**அன் சிலோன் இன்டஸ்றியல்**
**இன்ஜினியரிங் வேக்ஸ்**
105, ஸ்டான்லி றேட், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சி நடுங்கி ஆழ்கடலை நோக்கி ஓடிய பதினுன்கு யந்திரபடகுகள்

## மயிலிட்டி மீனவர் தகராறின் எதிரொலி

காங்கேசன்துறை, புதன்
மயிலிட்டிக் கடற்கரையில் தங்கியிருந்த மீனவர்கள் சிலர், தொழிலுக்குச் சென்று இன்றுகாலை மோட்டார் வள்ளங்களில் திரும்பியபோது, அவர்களைக் கரையை அடைய விடாது மயிலிட்டியைச் சேர்ந்த இன்னெரு கோஷ்டி சுமார் இருபது இயந்திரப்படகுகளில் கலைத்ததாகப் பொலிஸில் புகார்செய்யப்பட்டது.

அவர்களுக்கு அஞ்சி குருநகரைச் சேர்ந்த சுமார் பதினுலு இயந்திரப்படகுகள் கரையை அடையாது ஆழ்கடலை நோக்கிச் சென்றனவாம். தொழிலுக்குச்செல்லாமல் கரையில் நின்ற குருநகரைச் சேர்ந்தவர்களின் மூன்று இயந்திரப் படகுகளைப் பொலிஸார் விரைந்து வந்து காவல்புரிந்ததைத் தொடர்ந்து நிலைமை சமாளிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் சிவபாதம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர், குருநகர் மீனவர்களின் இயந்திரப் படகுகளில் உள்ள மீன்களைப் பாதுகாப்புடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எதிர்புறமாகக் கொண்டுவந்து இறக்கினர்.

மயிலிட்டியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் வேருெரு பகுதி மீனவர்களைக் கொண்டுவந்து தொழில் செய்ததாலேயே இக்கலவரம் ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது.

இரு பகுதியினருக்கும் இடையே சமரச முயற்சி காண்பதற்காக காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. லியனகே, வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. பற்றிக், காங்கேசன்துறை மீன்பிடி இன்ஸ்பெக்டர் திரு. ஈ. வி. ஆர். ராசநாயகம் ஆகியோர் கூட்டம் ஒன்றை வைப்பதற்கு ஒழுங்குசெய்துள்ளனர்.

மேலும் அசம்பாவிதங்கள் எதுவும் நடக்காமல் தடுப்பதற்கு இன்ஸ்பெக்டர் தலைமையில் பொலிஸ்படை ஒன்று மயிலிட்டியில் காவல் புரிந்துவருகிறது.

### காரைநகருக்கு ஓர் ஆஸ்பத்திரி

சங்கானை, திங்.
காரைநகரில் வைத்திய வசதிக் குறைபாடுகளால் ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டுஒரு வைத்திய நிலையம் அமைக்க வேண்டுமென நீண்டகாலமாக இப்பகுதி மக்கள் வற்புறுத்தி வந்தனர். இது சம்பந்தமாகச்சுகாதார அமைச்சரை வட்டுக்கோட்டை எம்.பி.வற்புறுத்தி வந்ததைத் தொடர்ந்து இப்பொழுது இதற்கான நிதி ஒதுக்கப்பட்டதுடன் வைத்திய நிலையம் கட்டுவதற்கான இடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் வியா.
காரைநகர் சிவன் கோயில் அர்ச்சகரான கணபதீஸ்வரக் குருக்களை காரால் மோதி மரணம் விளைவித்ததாக களனியாயைச் சேர்ந்த சிறிசேன என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மீண்டும் அடுத்த மாதம் 11-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. [ந. நி.]

## "நம்மவர்கள் 'சொகுசாக' வாழவிரும்புகிருர்களே"

### வட்டுக்கோட்டை எம். பி. கவலை

சுழிபுரம், புதன்
"இயற்கையின் கொடைகளை பாவித்து பயனடையத் தெரியாத சமூகமாக நாம் வாழ்ந்து வருகிருேம். நீர்வளம் நிறைந்திருந்தும் செல்வம் கொழிக்கும் நிலையங்கள் இருந்தும் உடலுழைப்புக்கு அஞ்சிய காரணத்தால் எம் சமூகம் இன்று பல்வேறு பிரச்சனைகளுக்கு ஆளாகி வருகிறது. எனது ஆஸ்திரேலிய பிரயாணத்தின் போது உடலுழைப்புக்கு மகத்துவம் கொடுக்கும் நிலை அங்கு இருப்பதைக் கண்டேன்." என வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலைய பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகை குறிப்பிட்டார். நிலைய முன்றலில் நடைபெற்ற கூட்டத்துக்கு திரு. க. தங்கராசா தலைமை வகித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் 'ஆண், பெண் உயர்வுதாழ்வு என்ற வேற்றுமை இன்றி எல்லோரும் ஒன்ருக உழைக்கவும் பொது வைபவங்களில் கலந்து கொள்ளவும், விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு உழைப்பதை நேர்முகமாகக் கண்டேன். 25 அங்குல மழைவீட்சியுள்ள அப்பிரதேசத்தில் மழைநீரை தொட்டிகளில் சேகரித்து பல்வேறு உபயோகங்களுக்கு பிரயோசனப்படுத்தும் நிலை அங்கு இருக்கிறது. ஆனல் நம் நாட்டில் போதிய நீர்பாசன வசதிகள், வளம் நிறைந்த காணிகள் இருந்தும் விவசாய விருத்திக்கு முன்வருவோர் தொகை மிகவும் குறைவாகவே இருக்கின்றன. எமது நாட்டு மக்கள் உழைக்காது மிகவும் சொகுசாக வாழவும், உல்லாசமாகப் பொழுதைப் போக்கவுமே விரும்புகின்றனர்" என்ருர்.

யாழ்ப்பாணத்தில்

## இந்தத்தியேட்டர்களுக்கே புதிய ஆண்டுக்கான லைசென்ஸ்

யாழ்ப்பாணம், வியா.
இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் குறிக்கப்பட்ட சகல திருத்தங்களையும் செய்த சினிமா தியேட்டர்களுக்கே புதியஆண்டுக்கான லைசென்ஸ் வழங்கப்படும் என யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. எஸ். நடேசன் அறிவித்துள்ளார். அண்மையில் திரு. நடேசன் தலைமையில் சுகாதாரப் பகுதி அதிகாரிகள், தியேட்டர் சொந்தக்காரர்களின் விசேஷ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தியேட்டர்களில் புகைத்தல் கண்டிப்பாக தடைசெய்யப்படல்வேண்டும், இதுபற்றிய இலவச விளம்பரங்களை தியேட்டர்களில் 'சிலைட்' மூலம் போட்டுக்காண்பிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டதோடு, சட்டத்தையும் மீறி தியேட்டர்களில் புகைப்பர்களைக்கண்டு பிடித்தால் அவர்கள் மீது பொலிஸார் மூலம் வழக்குத் தொடருவது மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [ந. நி.]

### பட்டினசபை நன்றி

வல்வெட்டித்துறை, புதன்
சென்ற ஏப்ரல் மாசம் 8-ம் திகதி வல்வெட்டித்துறையில் நடைபெற்ற கலவரத்தின் போது இளைஞன் ஆர். சிவஞானசுந்தரம் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானது சம்பந்தமான விசாரணை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெற்ற போது, இறந்தவரின் சார்பில் கட்டணமின்றி ஆஜரான வழக்கறிஞர்களுக்கு நன்றி தெரிவித்து ஒரு பிரேரணை வல்வை பட்டினசபைத் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலு தலைமையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

### கிழக்கு சீனவில் கலவரம்

டோக்கியோ, ஜூன் 7
கிழக்குச் சீன மாகாணங்களில் சீன அதிபர் மா-சே துங்குவின் ஆதரவினர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்குமிடையே நடைபெற்ற மோதல்களில் 1400 பேர் கொல்லப்பட்டனர். அல்லது காயப்பட்டனர் என சீனச் சுவரொட்டிகள் மூலம் கிடைத்த தகவல்களை டோக்கியோ நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார். இம் மோதல்களின்போது 500 பேர் காணமல் போயினர் என்றும் அவரது செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு சீன மாகாணங்களான கியாங்சு, கியாங்சி மாகாணங்களிலேயே இம் மோதல்கள் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

### "ஆசிரியர்கள் ஒரே குடும்பமாக இயங்கவேண்டும்"

புன்னலைக்கட்டுவன், புதன்
"மாறிக்கொண்டே வரும் கல்வித்துறையில் ஆசிரியரின் கல்வித்தராதரத்திலும் அவர்களது நிர்வாகத் திறமையே முக்கியமானது. மாணவரின் கல்வி வளர்ச்சிக்கும், பாடசாலையின் ஒழுங்கான கட்டுப்பாட்டுக்கும் ஆசிரியரின் நிர்வாகத் திறமை இன்றியமையாததாகும். ஒரு பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் ஒரு குடும்பம்போல ஒன்றுசேர்ந்து பாடசாலை வளர்ச்சிக்கு உழைத்தால், அப்பாடசாலையின் கல்விவளர்ச்சிக்கு அது வழிவகுக்கும்" என வடபகுதி வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் வலி-கிழக்கு ஆசிரியர் சங்க ஆண்டு விழாவில் பிரதம விருந்தாளியாகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினுர்.

### கார் விபத்து

யாழ்ப்பாணம், வியா.
ஆனைக்கோட்டையில் கார்விபத்தொன்றில் காயங்களுக்குள்ளான கணேசையர் என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். கணேசையரைக் காரால் மோதி காயம் விளைவித்ததாக மானிப்பாயைச் சேர்ந்த புறக்டரான திரு. கே. சேனதிராஜா என்பவருக்கு எதிராக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

### பிரதமர் வருவார்

சங்கானை, புதன்
பண்டத்தரிப்பு கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் 10-ம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஜூலை 28-ம் திகதி பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்வாரென நம்பப்படுகிறது.

### இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம

**வியாழன் 8-6-67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 இன்றையநிகழ்ச்சிகள், 7-30 பாடல்கள், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர் விருப்பம்.

இரவு 6-15 சங்கீத வகுப்பு, 6-30 பேச்சு — 'சிங்கள நாடகம்' — [illegible] 7-45 நாட [illegible] 9-30 சங்கீதநிகழ்ச்சி.

## 'சினிமா பாதையில் நமது நாடகங்கள் செல்கின்றன'

— வேர்ணன்

உடுவில், புதன்
'நகைச்சுவை நாடகங்களா அல்லது வாழ்க்கையின் பிரதான அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்படும் நாடகங்களா இன்றைய நிலையில் மக்களுக்கு பயனளிக்கக்கூடியவை என்பதை தெரிந்து அவற்றுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்.'

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஆசிரியமன்றத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மேற்கண்டவாறு கூறினுர்.

ஆசிரியர்மன்றத்தின் தலைவர் திரு. க. ந விஜயரத்தினம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். செயலாளர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

இலங்கையில் வளர்ந்து வரும் நாடகக்கலை திருப்திகரமான போக்கை பின்பற்றவில்லை. சினிமாக் கலையைப் பின்பற்றி உண்மையான நாடகக்கலைகள் கூட கீழ்த்தரமான - ஆபாசம்

[4-ம் பக்கம் பார்க்க]

சினிமா

## செல்வம்

விமர்சனம்

ஜாதகத்தில் அளவுக்கதிகமான நம்பிக்கை வைத்திருக்கும் ஒரு தாய். தாயின் வற்புறுத்தலால் ஜாதகத்தின்மீது நம்பிக்கை வைக்கும் ஒரு புத்திரன். பதியே தெய்வமெனக் கருதும் ஒரு ஏழைப்பெண். இவர்கள் மூவரையும் தவறுதலாகக் கணிக்கப்படும் ஜாதகம் எப்படி ஆட்டிப் படைக்கப்படுகிறது என்பதைத்தான் நாம் 'செல்வத்'தில் காண்கிருேம்.

வள்ளி எனும் ஏழைப் பெண்ணை மணந்ததால் வலுவற்ற ஜாதகனுக வரும் சிவாஜி கணேசன், தமது சிறந்த நடிப்பால், ஏற்ற அந்தப் பாத்திரத்துக்கு வலுவூட்டுகிருர். தன்னையும் தனது காதலியையும் பிரித்துவைக்க [தவருகக் கணிக்கப்பட்ட ஜாதகம் காரணமாக] தாய் முயற்சி செய்வதை அறிந்ததும் ஒரு 'ஓஹோ' போடுகிருர். நடிப்பை 'ஆஹா' என ரசிக்கத்தான் செய்கிருேம். குழம்பும்போதும், குமுறும் போதும், பயப்படும் போதும், பதறும் போதும், கொதிக்கும் போதும், குளிரும் போதும், காதலிக்கும் போதும், மனம் பேதலிக்கும் போதும், வேதனைப் படும் போதும், வேடிக்கையாக இருக்கும்போதும் அவரது நடிப்பைப் பார்த்துத் தமிழ்த் திரையுலகம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். சிவாஜி சிவாஜிதான்!

ஏழைப்பெண்ணுன வள்ளியாக வரும்விஜயா ஆரம்பத்தில் துள்ளி விளையாடுகிருர். போகப்போக அவரது நடிப்பு மெருகுபெற்றுமிளிர்கிறது. ஜாதகப்படி கணவன் பிரியவேண்டிய நேரம் வரும்பொழுது அவர் பூஜை அறையில் "காப்பாற்று காப்பாற்று" என்று கதறிக் குமுறி அழுது கண்ணீர்விட்டு வேண்டுவது, விஜயா ஒரு சிறந்த நடிகையாகிவிட்டார் என்பதற்கு எடுத்துக்காட்டாகி இருக்கிறது.

ராஜம்மா தான் சிவாஜியின் தாயார். 'சாரதா'வில் ஏற்ற அதே பாத்திரம் தானே. ஒருபடி முன்னேறியே நடித்துள்ளார்.

சகஸ்ரநாமம், ரங்கராவ், நாகையா ஆகிய பழம்பெரும் நடிகர்களின் அனுபவம் மிக்க நடிப்பையும் 'செல்வத்'தில் நாம் காண்கின்ருேம்.

நாகேஷின் கதாப்பிரசங்கமும் கேட்கலாம்.

வெள்ளைக்கார ஜோடியின் நடனம் [தமிழ்ப் படத்திற்குத்] தேவையற்றது.

நல்ல தரமான நடிப்புக்காகவும், நல்ல போதனைக்காகவும் குடும்பத்தோடு சென்று தாராளமாகப் பார்க்கக்கூடிய படம் 'செல்வம்'. இப்படம் யாழ்ப்பாணம் வெலிங்டனில் இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது.

— கணேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நமது மனம் இறைவனுடன் லயப்பட்டு இருக்கையில்நாம் முணுமுணுக்கவோ, குறை கூறவோ, துன்பப்படவோ மாட்டோம். எல்லாம் இறைவன் மயம், அவன் தந்தது, எல்லாம் நன்மைக்கே என்றுணர்ந்து மனச் சாந்தியுடன் இருப்போம்.

— சுவாமிராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு
வைகாசி மீ 25உ (8-6-67)

## யார் குற்றவாளி?

வல்வெட்டித்துறை இளைஞனின் 'கொலை' சம்பந்தமாக வழக்குத் தாக்கல் செய்வதில்லையென்றும் 'மேற் கொண்டும் நடவடிக்கை' எடுப்பதில்லையென்றும் அட்டோர்ணி ஜெனரல் தெரிவித்துவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானல், இது பெரும் ஏமாற்றமும் வேதனையும் அளிப்பதாகும்.

வல்வெட்டித்துறையில் சென்ற ஏப்ரல் மாதம் 8-ம் திகதி நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோக சம்பவத்தில் மாண்ட ஆர். சிவஞானசுந்தரம் என்ற இளைஞனின் மரணம் பற்றி விசாரணை நடத்திய பருத்தித்துறை நீதிபதி விசாரணையின்பின் அந்த இளைஞனின் மரணம் ''ஒரு கொலை'' எனத் தீர்ப்பளித்திருந்தார். நாட்டில் எந்த இடத்தில், எந்தச் சூழ்நிலையிலாவது ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்தால் அவர் எப்படிக் கொலை செய்யப்பட்டார் என்பதை ஆராய்ந்து கொலை செய்தவர்கள் யார் என்பதையும் கண்டுபிடித்து அக்கொலைக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனைபெற்றுக் கொடுக்க வேண்டியது பொலிசாரின் கடமையும் பொறுப்புமாகும். குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகப் பொலிசார் தமது புலன் விசாரணைமூலம் கண்டுபிடித்தவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு குற்றப்பத்திரிகை தயார் செய்வதிலும் மற்றும் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதிலும் அட்டோர்ணி ஜெனரல் உதவி புரிய வேண்டும் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதுடன் கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்கள் நடைபெருமல் தடுப்பதும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதன் மூலம் மற்றவர்களும் இதுபோன்ற செயல்களில் ஈடுபடாமல் தடுத்து குற்றச் செயல்களை ஒழித்துக்கட்ட உதவுவதும் பொலிசாரின் கடமையும் பொறுப்புமாகும். இதற்குத்தான் பொலிஸ் சேவைக்கென வருடாவருடம் பொதுமக்களின் பணமும் செலவிடப்படுகிறது.

வல்வெட்டித்துறையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஓர் இளைஞன் கொல்லப்பட்டிருக்கிருர். அது 'கொலை' என நீதிபதி தீர்ப்பளித்திருக்கிருர். எனினும் கொலையாளியைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? இது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில்லையென்றும் எவர்மீதும் வழக்குத்தாக்கல் செய்வதில்லையென்யென்றும் அட்டோர்ணி ஜெனரல் முடிவு செய்திருந்தால் அதற்கு என்ன காரணம்?

கொலையாளி யார் என்பதைக் கண்டுபிடிக்கும் திறன் நமது பொலிஸாருக்குஇல்லையா? பொலிஸ் படைக்கென வருடா வருடம் செலவிடும் பணம் வீண்தானு? விசாரணை நடத்திய நீதிபதி 'கொலை' எனக் கூறியும் கொலையாளியைக் கண்டுபிடித்து தண்டனை பெற்றுக் கொடுக்கத் தவறினல் இந்நாட்டில் கொலை மற்றும் குற்றச் செயல்களை எப்படித் தடுப்பது? யார் தடுப்பது?

இவ்விஷயத்தில் அரசாங்கமும் அக்கறை எடுத்து தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறினல் பொலிஸார் மீதும் அரசாங்கத்தின் மீதும் பொதுமக்கள் நம்பிக்கை இழக்கக்கூடும். பொலிசாரே இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதால் இவ்விஷயத்தில் அரசாங்கத்தின் பொறுப்பு மிக அதிகமாகிறது.

## 'ஐயமின்றி கற்கவேண்டும் அதன்படி வாழவேண்டும்'

### வஜ்ரவேலு முதலியார் பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

''கற்பது இன்றியமையாதது. எல்லாவற்றையும் மனிதனுல் கற்கமுடியாது. கற்கவும் கூடாது. முதலில் பலநூல்களிலும் கற்கவேண்டிய தேவையானவைகளை மாத்திரம் கற்கவேண்டும். கற்கும் போது தெளிவின்றி ஐயமுடன் கற்றல் அறிவு எம்மைச் சாராது. எனவே ஐயமின்றி, துணிவுடன், தெளிவாக உள்ளதை உள்ளபடி கற்கவேண்டும். இல்லாவிட்டால் தவருன வழியில் நாம் செல்லவேண்டி நேரிடும். பின்னர் நாம் கற்றதன்படி வாழ்க்கையில் செவ்வனே வாழப்பழக வேண்டும். இதுவே தான் நாம் கற்றதனுல் அடையும் நற்பயனுகும்.''

மேற்கண்டவாறு நேற்றுக் காலை நடைபெற்ற யாழ்ப்பாணம் பெற்றேர் சங்கக் கூட்டத்தில் 'கல்வியும் வாழ்க்கையும்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் திரு. வஜ்ரவேலு முதலியார் குறிப்பிட்டார்,

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் முன்னுள் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கு. நேசையா தலைமையில்நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வஜ்ரவேலு முதலியார் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

கல்வியை மாத்திரம் கற்பதால் ஒருவன் முழுமனித வளர்ச்சியை அடைந்துவிட முடியாது. அறிவை மாத்திரம் ஒட்டிய விஞ்ஞானத்தையும் நடைமுறையை ஒட்டிய கலையையும் கற்று தான் கற்றதை சமுகத்தவர்கள் அறிய வைக்கவேண்டும். இதுவே கற்றேர் அறிந்த நிலை. இந்தக் கல்விநிலையே ஆன்மாவோடு ஒன்றிநின்று சகல பிறவிகளிலும் எமக்கு ஈடேற்றம் தருகின்றதாகும்.

நாம் கல்வி கற்றவர்களாக விருந்தாலும்கூட கேள்வி தான் கல்விஞானத்தை விருத்தியடையச் செய்கின்றது. மனம் விரும்பும் சகல இடத்துக்கும் அலைனச் சென்று அலையவிடாது தீமையினின்றும் நீக்கி மனிதனுக்கு நன்மைகளை விளைவிப்பது அறிவாகும். கல்வி அறிவும், கேள்வி அறிவுமே மனதை அடக்கிஆளும் அறிவை மனிதனுக்கு வழங்குகின்றது. [ந. நி.]

### பசுவதை எதிர்ப்பு ஊர்வலம

உடுவில், புதன்

சைவ அனுட்டான பாதுகாப்புச்சபையினர் இம் மாதத்தில் பசுவதை எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை பிரம்மாண்டமான முறையில் நடத்தத் தீர்மானித்துள்ளனர். அண்மையில் கூடிய சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இதற்கான இறுதி முடிவும் திகதியும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இங்குள்ள இறைச்சிக் கடைகளில்பசுக்களின் இறைச்சியும் விற்பனையாவதை எதிர்த்தும் இந்த அநீதிச் செயல்களில் இருந்து கால்நடைகளை காப்பாற்றுவதன் பொருட்டுமே பசுவதை எதிர்ப்பு ஊர்வலம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

இம்மாதம் 21-ம் திகதி கீரிமலைச் சிவன் கோவிலில் இருந்து மேற்படி ஊர்வலத்தை ஆரம்பித்து மாவிட்டபுரம் ஊடாக தெல்லிப்பளைவரை நடத்துவதற்கு சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை முடிவு செய்துள்ளது. தெல்லிப்பளையிலுள்ளதுர்க்காதேவி அம்மன் கோவில் வீதியில் பசுவதை எதிர்ப்பும் பிரசாரக் கூட்டம் ஒன்றையும் அன்றைய தினமே நடத்தவும் மேற்படி பாதுகாப்புசபை ஒழுங்குகள் செய்து வருகிறது.

### உப தபால்நிலையம் வேண்டும்

உடுவில், புதன்

''உடனடியாக சங்குவேலிக் கிராமத்திற்கு ஓர் உப தபால் நிலயத்தை அமைத்துத் தரும்படி வேண்டுகிறேம்'' என்று சங்குவேலி கிராமமுன்னேற்றச்சங்கத்தினர் தபாற்கந்தோர் தலைவரை வேண்டியுள்ளனர். மேற்படி சங்கத்தினர் தபாலதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறான கோரிக்கையை விடுத்துள்ளார்கள்.

### 'சினிமா ..

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நிறைந்த பாதையில் சென்றுகொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பெண் நடிகைகளுக்குத் தான் பஞ்சம் ஏற்படுகின்றது. நான் தயாரித்துக்கொண்டிருக்கும் தமிழ் நாடகத்துக்கு வேண்டிய பெண் நடிகைகள் கிடைக்க முடியாமலிருக்கிறது. கலை வளர ஆர்வமுள்ள பெண்கள் அவற்றில் பின்நிற்கக் கூடாது.

ஆசிரியர்கள் வித்துவான் சி. ஆறுமுகம், ஆ. கல்யாணசுந்தரேசன் திருமதி ஜே. கிருஷ்ணசாமி, திருமதி சிவ[illegible] இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றன.

### 'கலை வளர்கிறது'

உடுவில், புதன்

''இயல், இசை, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் மனிதன் துன்பநிலையடைந்த போது மனதிற்கு மகிழ்ச்சியையும, அமைதியையும் கொடுக்க வல்லன. இலக்கியம், நாட்டியம் போன்றனவும் மனதை மகிழ்விப்பனவே. இன்று தமிழ் மக்களிடையே இவ்வகையான பாரம்பரியமான கலைகளை வளர்க்க வேண்டும் என்ற ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனுல் தான் இன்று கிராமங்கள் தோறும் நாடகங்கள், இசைக்கச்சேரிகள் நடாத்தப்பட்டு வருகின்றன'' என்று ஒரு நாடக அரங்கேற்றத்திற்கு தலைமை வகித்துப் பேசிய உடுவில் கிராமசபையின் தலைவர் திரு. சி. முத்துலிங்கம் கூறினுர்.

[5-ம் கலத் தொடர்ச்சி]

மென்றும் அவருடன் தமக்குத் தொடர்பு இருப்பதால் தாம் இவ்வகையில் ஓரளவு உதவலாமென்றே நம்புவதாகவும் சொன்னுர்: பலே பலே! இறைவன் துணை செய்யவேண்டும்.

ஃ ஃ ஃ

தமிழகல்திலிருந்து இங்கு பல அறிஞர்கள் அழைக்கப் படுகையில், ஈழத்து அறிஞர்களைத் தமிழகம் அழைப்பதில்லையென்று ஒருநாட்பட்ட குறை இருசகிறதல்லவா? இந்த ''ஒன் வே டிராபிக்'' [ஒருவழிப் பாதை] நீங்கவேண்டிய அவசியத்தை முதலியார் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ''முன்னர் தமிழகத்துக்கு நாவலர் பெருமான், செந்திநாதையர் முதலிய பெரியார்களும் வந்து வழிகாட்டினர். சமீப ஆண்டுகளில் வட்டுக்கோட்டை நாகலிங்கத்தார் முதலியவர்களும் தமிழகத்துக்கு வருகை தந்து சமய மகாநாடுகளில் தலைமை தாங்கியுமுள்ளனர். தமிழகத்திலிருந்து அறிஞர்கள் இங்கு வந்து போவதுடன்விட்டுவிடாமல் அங்குள்ள பல கலாசார, சமயச் சங்க நிர்வாகிகளுடனும் ஈழத்து சமய ஸ்தாபன நிர்வாகிகள்நெருங்கிய தொடர்புவைத்துக் கொண்டிருப்பின் ''இருவழிப் பாதை'' ஏற்படுவதுடன், இரு நாட்டிலுமுள்ளவர்களுக்கும் நல்லுறவ பலப்படும்'' என்றூர். அந்தக் குறை நீங்கும் காலம் இனி சீக்கிரம் வருமென்றே நம்புவோம்.

ஃ ஃ ஃ

அகில இலங்கை காந்தி சேவாசங்கத்தார், அக்கராயன் குளத்திலே இம்மாதம் 12, 13ந் திகதிகளில் சிரமதானம் நடத்துவதாயும் சுமார் 500 பேர் இதில் பங்குபற்றிக் காடழிக்கப் போவதாகவும் அறிய மகிழ்ச்சியாக உள்ளது. இந்த நல்ல பணிக்கு உதவுவது நல்ல தர்மமாகும். இங்கு உணவுப் பிரச்னையைத் தீர்க்கவும், நம் மாணவர்களை ஆக்கப்பணியில் ஈடுபடுத்தவும் இது பெரிதும் உதவுவதாகும்.

ஃ ஃ ஃ

காமாத்தம் மெனுங் கார்
வலைப்பட்டு நான்
போமாத் தையறி யாது
புலம்புவேன்
ஆமாத்தூர் அரனே
யென்ற ழைத்தலும்
தேமாத் தீங்கனி போலத்
தித்திக்குமே.

—அப்பர் சுவாமிகள்.

[காமத்தையே பொருளாகக் கொண்டு அறியாமையைச் செய்யும் வலையிலே சிக்கி மீளும் வழி அறியாது புலம்புகின்ற அடியேன், ''ஆமாத்தூர் அரனே'' என்று அழைத்தலும் தேன் போன்ற மிக இனிய மாங்கனி போலப் பெருமான் தித்தித்தனன்.]

## ஐயாறன் எழுதுவது

சங்கநூல் செல்வர் பண்டிதமணி அருளம்பலவனர் எழுதிய திருவாசக ஆராய்ச்சி உரை நூல் வெளியீட்டு விழா காரைநகரிலே நேற்று முன்தினம் சிறப்பாக நடந்தது. முதல்பாகம்தான் இப்போது வெளியாகியுள்ளது. இரண்டாவது பாகத்துக்கான உரைகளை எல்லாம் எழுதிப் பூர்த்திசெய்துவிட்டு, சரியாக ஓராண்டுக்கு முன் அவர் அமரராகிவிட்டார். அவரது குடும்பத்தார், அவர் விட்டுச் சென்ற பணியை நன்கு நிறைவேற்றி முதற்பாகத்தை அழகான நூலாக்கியுள்ளது பாராட்டத்தக்கதாகும்.

அவர் ஏற்கனவே வெளியிட்ட பதிற்றுப்பத்து உரை நூலில் பெரும்பகுதி அப்படியே வீட்டில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஒரு புத்தகம் விற்ருல் 3 ரூபாய் நஷ்டமென்றும், விற்காவிடில் 13 ரூபாய் நஷ்டமென்றும் அவர் தெரிவித்தார். அந்த நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலத்தாரின் பரிசு [ஆயிரம் ரூபாய்] கிடைத்தது. என்ருலும் அந்த நூல் வெளியீட்டால் அவருக்கு எவ்வளவு நஷ்டமோ!

இப்போது வெளியிடப்பட்டுள்ள திருவாசகஉரைக்கும் அதேமாதிரி ஏற்பட்டு விடக்கூடாது. பல அறிஞர்கள் இந்த உரை நூலைப் பாராட்டியுள்ளனர். அன்று விழாவில் சில பிரதிகள் விலையாயின. அத்துடன் இது நின்றுவிடாமல் எல்லாப் பிரதிகளையும் தமிழ்க் குடும்பங்கள் ஒவ்வொன்றும் வாங்கி, ஆதரித்து தினசரி தங்கள் வீட்டிலே குடும்பமனைத்தும்சேர்ந்து அமர்ந்து சில பாட்டுக்களையாவது உரையுடன் படிப்பது பல விதங்களிலும் நன்மையாகும். அப்போதுதான் இதை மிகச் சிரமப்பட்டு எழுதிய அமரர் அருளம்பலவனரின் ஆத்மாவுக்கும், பூரண சாந்தி கிடைக்கும்.

பாரத நாட்டில் இவ்வித நூல்களுக்குச் சாகித்திய மண்டலத்தார் ரூபாய் ஐயாயிரம் பரிசு அளிக்கின்றனர். இலங்கையும் அவ்விதம் ஏன் செய்யக்கூடாது? லட்சக்கணக்கான பணம் வீணுகையில், நம் அறிஞர்களுக்கும், கலைஞருக்கும் பரிசளிப்பதில்தான கஞ்சத்தனம் காட்டவேண்டும்;

ஐ. நா. கல்வி கலாசார ஸ்தாபனம் இலங்கை நூல்களுக்காக வருடத்தில் மூன்று பரிசுகளை வழங்க முன்வந்திருப்பதாயும் இதில் தமிழுக்கு ஒன்று கிடைக்குமென்றும், பரிசின் மதிப்பு ஐயாயிரம் என்றும் ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கேள்விப்பட்டேன். இலங்கை சாகித்திய மண்டலமும் தன் பரிசுத்தொகையை ஐயாயிரத்துக்கு உயர்த்தக்கூடாதா? நூலாசிரியருக்கு இதனுல் வாழ்க்கைப்பிரச்னை தீராவிடினும், வெளியீட்டுக்காகப் பட்ட கடனில் ஒருபகுதியையாவது தீர்க்கலாமல்லவா?

ஃ ஃ ஃ

தலைமைவகித்த சித்தாந்த கலைச்செல்வர் வஜ்ரவேலு முதலியார் ஒரு நல்ல யோசனை கூறினுர். தமிழகத்திலே பல கோவில்களிலும் புத்தகசாலை உள்ளதாம். இந்து அறநிலையக் கமிஷனருடன் தொடர்பு வைத்துக் கொண்டால் அவர் எல்லாக் கோவில் நூல்நிலையங்களிலும் இவ்வித அரிய நூல்களை வாங்கி வைக்க ஒழுங்கு செய்யலா

[4-ம் கலம்பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘யுத்தத்தை உடன் நிறுத்துக’

## இஸ்ரேல்-அரபுநாடுகளுக்கு ஐ. நா. பாதுகாப்பு சபை ஏகமனதாக விடுத்த கோரிக்கை

நியுயோர்க், ஜூன் 7

மேற்கு ஆசியாவில் உடனடியாகப் போர் நிறுத்தம் பிரகடனப்படுத்துமாறும், எல்லா இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துமாறும் ஐ. நா. பந்தோபஸ்து சபை நேற்றிரவு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

பந்தோபஸ்து சபைப் பிரதிநிதிகளிடையே நடைபெற்ற தனிப்பட்ட பேச்சு வார்த்தைகளின் முடிவிலேயே இத்தீர்மானம சமர்ப்பிக்கப்பட்டது. எல்லாமாக உள்ள 15 பிரதிநிதிகளும தீர்மானத்தை ஆதரித்தன.

நகல் தீர்மானம் பற்றி அமெரிக்காவும் ரஷ்யாவும் ஓர் உடன்பாட்டுக்கு வந்திருந்தன. போர் ஆரம்பமாகுமுன் இருந்த நிலைகளுக்குத் துருப்புகள் திரும்ப வேண்டுமென்ற நிபந்தனையை ரஷ்யா விட்டுக்கொடுத்தது.

ஐ. நா. பந்தோபஸ்து சபைத் தலைவர், மேற்கு ஆசியாவில் போரிடும் நாடுகள் சபையின் தீர்மானத்துக்கு இணங்க நடந்து கொள்வார்களெனத் தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பேர்க், இத்தீர்மானத்துக்குப் பின்னல் ஐ. நா.வின் அதிகாரம் இருப்பதாகவும், சம்பந்தப்பட்ட நாடுகள் அதற்குப் மதிப்பளித்துப் போர் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வார்களெனத் தாம் நம்புவதாகவும் கூறினர். இத்தீர்மானம் ஒரு முக்கிய நடவடிக்கையாகும் என்றார் அவர்.

ஐ. நா. பந்தோபஸ்து சபையினல் செய்யக்கூடிய ஆகக் குறைந்த பட்ச நடவடிக்கை இதுதான் என்று ரஷ்யப் பிரதிநிதி கூறினர்.

மற்றும் பிரிட்டன், இந்தியப் பிரதிநிதிகளும், வேறு சில நாட்டுப் பிரதிநிதிகளும் பேசினர்கள்.

பந்தோபஸ்துசபைத் தீர்மானம், மேற்கு ஆசியாவில் நிலையான சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்ட வழி வகுப்பதாக அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் வாஷிங்டனில் தெரிவித்தார். ‘இது அவசியமான முதல் நடவடிக்கையாகும்’ என்று அவர் குறிப்பிட்டார்.

## இஸ்ரேல் துருப்புகள் துரிதமாக முன்னேறுகின்றன

### ஐ. அ. குடியரசிலும், ஜோர்தானிலும்

இதற்கிடையில், இஸ்ரேல் துருப்புகள் ஐ. அ. குடியரசு, ஜோர்தான் ஆகிய நாடுகளுக்குள் பல மைல் தூரம் முன்னேறியிருப்பதாக போர்முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ. அ. குடியரசுக்குள் 70 மைல் தூரம் இஸ்ரேலிய துருப்புக்கள் முன்னேறிச் சென்றுள்ளதாக டெல் அவிவ் செய்திகள் தெரிவித்துள்ளன. அப் அரீஷ், அடி அஜீலா ஆகிய ஐ. அ. கு. தளங்கள் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல் நடாத்திய தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் துருப்புகள் ஐ. அ. குடியரசுக்குள் பெருமளவில் முன்னேறியிருப்பதை ஐ. அ. குடியரசு இராணுவ வட்டாரங்கள்ஒப்புக்கொண்டுள்ளன. ஆனல், இஸ்ரேல் துருப்புகள், பலத்த சேதத்துடன் திருப்பியடிக்கப்படுவதாக அவை தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னதாக, இரண்டுநாள் போருக்குப் பின், காஸா நகரைத் தாம் கைப்பற்றிவிட்டதாக இஸ்ரேல் துருப்புகள் தெரிவித்தன.

ஜோர்தான் எல்லைக்குள்ளும் இஸ்ரேலிய துருப்புகள் சில மைல்தூரம் முன்னேறியுள்ளன. ஜெருசலம், ஜெரோம் நகரங்களில் இஸ்ரேல்—ஜோர்தான் துருப்புகளுக்கிடையேகடும்சண்டை நிகழ்வதாகக் கூறப்படுகிறது. பெரும்பாலும் நேருக்கு நேர் நடக்கும் கைகலப்பே இங்கு நடைபெறுகிறது. ஜெருசலம் தனது கைகளிலேயே இருப்பதாக இஸ்ரேல் உரிமை பராட்டியுள்ளது.

இஸ்ரேல் விமானங்கள் ஜோர்தான் கிராமங்களைக் குண்டு வீசித் தாக்கியுள்ளதாக ஜோர்தான் அறிவித்துள்ளது. 64 இஸ்ரேல் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது. இஸ்ரேல் விமானங்கள் நேபாம் குண்டுகள் வீசியதாக ஜோர்தான் குற்றம்சாட்டியுள்ளது.

## அமெரிக்க-பிரிட்டிஷ் விமானங்களும் குண்டு வீசியதாக குற்றச்சாட்டு

### இரு நாடுகளும் மறுத்துள்ளன

ஜோர்தானை, இஸ்ரேல் விமானங்களுடன் சேர்ந்து அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களும் தாக்கியதாக ஜோர்தான் மன்னர் ஐ. அ. குடியரசு ஜனதிபதி நாசருக்குத் தெரிவித்துள்ளார். நாசர் இக்குற்றச்சாட்டை ஐ. நா. சபைக்கு அறிவித்துள்ளார்.

சிரியா-இஸ்ரேல் எல்லையிலும் சண்டை நிகழ்ந்து வருவதாக இருதரப்பினரும் கூறுகின்றனர். இஸ்ரேல் துருப்புகளுடன் சிரிய எல்லைத் துருப்புகள் கைகலப்பில் ஈடுபட்டுள்ளதாக அறிவித்துள்ள சிரியா, ஒரு பெரும் போராட்டத்துக்கான ராணுவ ஜரூர் நடவடிக்கைகளைத்தான் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. இஸ்ரேல்கிராமமொன்றைக் கைப்பற்றியதாக சிரியா அறிவித்துள்ளது.

இதை இஸ்ரேல் மறுத்துள்ளது.

சினய் பகுதியில் இரண்டு நாள் தொடர்ந்து நடைபெற்றசண்டையில்இஸ்ரேல் துருப்புகள் 250 ஐ. அ. குடியரசு டாங்கிகளை சேதப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் அரபு நாடுகளின் மீதான தாக்குதலில் ஈடுபட்டதாக அரபு நாடுகள் சுமத்திய குற்றச்சாட்டை அமெரிக்காவும், பிரிட்டனும் நிராகரித்துள்ளன.

அமெரிக்க ராஜாங்க பாதுகாப்புக் காரியதரிசி டீன் ரஸ்க் அரபு - இஸ்ரேல் போரில் அமெரிக்க விமானங்கள் எதுவுமே [illegible] வில்லையென அறி[illegible]ளார். அதுவெறும் கட்டுக்கதை என அவர் அச்செய்தியை மறுத்தார்.

லண்டனில் காமன்ஸ்சபையில் பேசும்போது, பிரிட்டிஷ் விமானங்கள் அரபுப் போரில் பங்குபற்றியதாகக் கூறப்படும் செய்தி பொய்யென பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் மறுத்தார். மேற்கு ஆசிய நாடுகளுக்கான ஆயுத ஏற்றுமதி யாவையும் தற்காலிகமாக பிரிட்டன் நிறுத்தி வைத்துள்வதாகவும் அவர் அறிவித்தார். சுயஸ் கால்வாயை மூடுவதென்ற ஐ. அ. குடியரசின் முடிவைச் சட்ட ரீதியாகச் செல்லுபடி [illegible]

## தூதரக தொடர்புகள் முறிக்கப்பட்டன

### பிரிட்டனுக்கும் - அமெரிக்காவுக்கும் எண்ணை ஏற்றுமதி தடை

ஐ.அ.குடியரசு உட்பட ஐந்து அரபு நாடுகள் அமெரிக்காவுடன் தூதரகத் தொடர்புகள் யாவற்றையும் முறித்துக்கொண்டுள்ளன. ஐ. அ. குடியரசு, சிரியா, ஈராக், சூடான், அல்ஜீரியா ஆகியனவே அந்த ஐந்துநாடுகள். சிரியா, ஈராக் சூடான் ஆகிய மூன்று நாடுகளும் பிரிட்டனுடனும் தமது தூதரகத் தொடர்புகளைத் துண்டித்துள்ளன. அல்ஜீரியாவும், ஐ.அ. குடியரசும் ஏற்கனவே ரொடீஷியாவிவகாரத்தில் பிரிட்டனுடன்தமதுதூதரகத்தொடர்புகளைமுறித்துகொண்டிவிட்டன.

குவெயித், ஈராக், அல்ஜீரியா ஆகிய நாடுகள் பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் எண்ணை ஏற்றுமதி யாவற்றையும்நிறுத்தி வைத்துள்ளன.

தனது நாட்டிலுள்ள சகல அமெரிக்க, பிரிட்டிஷ் எண்ணைக் கம்பனிகளையும் அல்ஜீரியா அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குக்கீழ் கொண்டு வந்துள்ளது.

சிரியாவும் லெபனனும், தங்கள் துறைமுகங்களிலிருந்து எல்லா எண்ணை ஏற்றுமதியையும் தடைசெய்துள்ளன.

## மொத்தம் 8 இந்திய வீரர் காஸாவில்கொல்லப்பட்டனர்

### யு தாண்ட், பிரதமர் இந்திரா கண்டனம் தெரிவித்துள்ளனர்

காஸாவில் நிறுத்தப்பட்டுள்ள ஐ.நா. அவசரகாலப் படை நிலையத்தின்மீது மீண்டும் இஸ்ரேல் துருப்புக்கள் தாக்கியதால், மேலும்மூன்று இந்திய ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். ஏற்கனவே, முதல் தாக்குதலில், ஐந்து இந்தியர் கொல்லப்பட்டனர். 10பேர் காயமுற்றனர். நேற்று இரண்டரை மணித்தியாலமாக இந்தியப்பிரிவின்மீது இஸ்ரேல் பீரங்கிகள் தாக்குதல் நடத்தியதன் விளைவாக, மூவர் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமுற்றனர்.

மூஇச்செய்தியை ஐ. நா. சபைக்கு அறிவித்த ஐ.நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட், தாம் இதுபற்றி இஸ்ரேலுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளதாகக் கூறினர்.

காஸாவிலுள்ள இந்தியத் துருப்புக்கள்மீது இஸ்ரேல் வேண்டுமென்றே தாக்குதல் நடாத்தியிருப்பதாகத் தாம் நம்புவதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று லோகசபையில் பேசுகையில் கூறினர். ஐ. நா. அவசரகாலப்படையின் இந்தியர்பிரிவு சீக்கிரமாகவும் பாதுகாப்பாகவும் காஸா பகுதியிலிருந்து வெளியேற பயனுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனத்தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். மேற்கு ஆசியாவில் நிலவும் பிரச்னையை இஸ்ரேல் ஆயுதப் போராக்கத் துணிந்திருக்கிறது என்றும் பிரதமர் இந்திரா குறிப்பிட்டார்.

ஐ.நா.அவசரகாலப் படையைச்சேர்ந்த இந்திய இராணுவவீரர், காஸா கடற்கரைக்கு அணிவகுத்துச் சென்றுள்ளனர். அங்கிருந்து அவர்கள் சைப்பிரசுக்குச் செல்வதற்காக சுவீடிஷ் கப்பலொன்றைக்காத்து நிற்கின்றனர், இந்திய, சுவீடிஷ் இராணுவவீரரைக்கொண்டு சைபிரஸ் செல்லவிருக்கும் சுவீடிஷ் கப்பலுக்குப் பத்திரம் அளிக்க இஸ்ரேல் சம்மதம் தெரிவித்துள்ளது.

ஈரானில்அரபுநாடுகளுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மந்திரிசபைக்கூட்டத்தின்பின், இந்த அறிவித்தல் செய்யப்பட்டது. பாலஸ்தீன மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும், மேற்குஆசியாவில் சமாதானத்தை ஏற்படுத்த ஐ. நா. முயற்சிசெய்யவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது.

பாரிசில், ஈரான் மன்னர் பிரெஞ்சு ஜனதிபதி டிகோ

[8-ம் பக்கம்பார்க்க]

## கெய்ரோவில் அமெரிக்க தூதரக ஆர்ப்பாட்டக்காரரால் தீ வைப்பு

### ஐ. அ. குடியரசை விட்டேகுமாறு அமெரிக்க பிரஜைகளுககு உத்தரவு

கெய்ரோவிலுள்ள அமெரிக்கத்தூதராலயத்தைஅரபு ஆர்பாட்டக்காரர்த் தீ வைத்துக்கொளுத்தியதாகக் கடைசியாக வந்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. ஆர்ப்பாட்டக் காரரைப் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

மற்றுமொரு செய்தி, ஐ. அ. குடியரசிலுள்ள அமெரிக்கப் பிரஜைகள் அனைவரையும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு ஐ. அ. குடியரசு உத்தரவிட்டுள்ளதாகக் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீட்டா

பூரண ஆடையுள்ள பால்
பவுடரையே கேட்டு வாங்குங்கள்




ஒல்லாந்து நகரிலிருக்கும் அம்ஸ்ட்டாமிலிருந்து வருகிறது

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர். மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது. ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற் கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான முதற்றர பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது: இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

**மில்லர்ஸ்**

லிமிட்டெட்.


# செய்திச் சுருக்கம்

### தற்காலிக வேலைநீக்கம்

உடுப்பிட்டி, புதன்

கொக்குத்தொடுவாய் கிராம சேவையாளர் திரு. தர்மராசா தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளாரெனத் தெரிகிறது. வவனியா அரசாங்க அதிபரின் உத்தரவைத் தொடர்ந்தே முல்லைத்தீவுக் காரியாதிகாரி பிரஸ்தாப கிராம சேவையாளரை தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளதாக அறியப்படுகிறது.

ஃ

### நீரியல் ஆராய்ச்சி மண்டபம்

புன்னாலைக்கட்டுவன், புதன்

ஆசியபவுண்டேஷன் பிரதிநிதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ள டேவிட்சன் தம்பதிகள், வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. வை. சுந்தரலிங்கத்துடன் தொண்டமானாறு போன்ற நீரியல் ஆராய்ச்சி நடைபெறுமிடங்களையும், சில பாடசாலைகளையும் பார்வையிட்டபின் யாழ்ப்பாணப் பகுதியில் ஒரு நீரியல் ஆராய்ச்சி மண்டபம் கட்டித்தருவதாக உறுதியளித்தனர்.

ஃ

### அரசியல் கலப்பற்ற மாணவர் முன்னணி

மாணவர் தமது மத்தியில் எழக்கூடிய கல்வி, பாடசாலைச்சேவைக் கட்டணம், பாடநூல்கள், மதக்கருத்துகள் சம்பந்தமான பிரச்னைகளை அரசியல்வாதிகளின் தலையீடின்றித் தீர்க்கவும், வேலையில்லாத்திண்டாட்டம், சீதனம் போன்ற பிரச்னைகளுக்கு முடிவு காணவும் அரசியல் கலப்பற்ற முன்னணியொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் வடமராட்சிப் பகுதியில் நடந்து வருவதாகத் தெரிகிறது.

ஃ

### சேமிப்புப்பத்திரம் கிடைக்கவில்லை

தேசிய சேமிப்ப வாரவிழாவை முன்னிட்டுகடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பண்டத்தரிப்பு, மாதகல் பகுதி மக்கள் பலர் தேசிய சேமிப்புப்பத்திரம் பெறுவதற்காக ரூபா 3000 க்கு மேல் பண்டத்தரிப்பு, மாதகல் கிராம சேவையாளரிடம் கொடுத்துத் தற்காலிக பற்றுச்சீட்டுகள் பெற்றுக்கொண்டனர். ஆனால் இதுவரை பணம் கொடுத்தவர்கள் கைக்குச் சேமிப்புப்பத்திரங்கள் கிடைக்கவில்லை. இது சம்பந்தமான ஒரு முறைப்பாடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

ஃ

### மைதானம் திருத்தினர்

சங்கானை, புதன்

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை விளையாட்டு மைதானத் திருத்த வேலைகளை வாலிபர்கள் மேற்கொண்டுள்ளனர். பாடசாலைக்கருகாமையிலுள்ள வாலிபர்கள் சிரமதான மூலம் பற்றைகளை வெட்டித் துப்புரவுசெய்தனர். திரு. நா. முத்தையா தலைமை தாங்கினார். ஃ

### தபால் நிலையம்

காரைநகருக்கு ஒரு வசதிமிக்கத் தபால் கந்தோர் வேண்டுமென்ற கோரிக்கையையடுத்து, வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியினால் விரைவில் தபால் நிலையம் நிறுவப்படுமென தபால் அமைச்சு திரு. அமிர்தலிங்கத்துக்கு அறிவித்துள்ளது. தபால் நிலையத்துக்கான காணி சுவீகரிக்கப்பட்டுவிட்டதென்றும் விரைவில் கட்டட வேலை ஆரம்பமாகுமென்றும் தபால் அமைச்சு அறிவித்துள்ளதாகத் தெரிகிறது. ஃ

### தாச்சிப்போட்டி

சண்டிருப்பாய் இந்தக் கல்லூரி மாணவருக்கும் சந்திரோதயக் கிளப்பிற்குமிடையில் சண்டிருப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் சிநேகபூர்வமாக நடைபெற்ற தாச்சிப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. மத்தியஸ்தர்களாகத் திருவாளர்கள் ரி. காசிநாதன், எஸ். சிவராசா எஸ். அமிர்தலிங்கம் ஆகியோர் கடமையாற்றினா.





பூரண இன்பம்!

# திருப்தி!

திருப்தி தரும் பூரணமான இன்பம்; பக்குவம் முதிர்ந்த, வேர்ஜினியா புகையிலை ரகங்களின் செறிந்த சுவை - திறீ றோஸஸ் தரும் உத்தரவாதம் இவையே.



இலங்கையின் அபிமானத்தை

# திறீறோஸஸ்

பெற்றது தெளுல் தான்



இலங்கையில் தயாரிப்போர்:

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகியின் தாயாருக்கு பொற்கிழி

யாழ்ப்பாணம், வியா.

''மூன்ருவது உலகயுத்தம் ஆரம்பித்தால், 2வது உலக யுத்தத்தின் போது நடந்தது போல, இடதுசாரித் தலைவர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் சிறையிலடைக்கப் படுவார்கள், இதை எதிர்த்துப் போராட தொழிற் சங்கங்கள் தயாராக இருக்க வேண்டும். ஏனெனில் மூன்ருவது உலக யுத்தம் ஆரம்பிக்கும் அறிகுறிகள் காணப் படுகின்றன''

திறந்த வெளியரங்கில் அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கந்தசாமி ஞாபக தினக் கூட்டத்தில் ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்க பிரதிநிதி திரு. வி. பாலசிங்கம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சி. இரத்தினசபாபதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. எட்மண்ட் சில்வா கந்தசாமியின் தாயாருக்கு சங்கத்தின் சார்பில் பொற்கிழி வழங்கினார். தலைவர் திரு. இரத்தினசபாபதி பேசும் போது கந்தசாமி தினமாகிய ஜூன் மாதம் 5-ம் திகதியை விடுமுறை தினமாக்க வேண்டுமென்றார்.

## கூப்பன் மோசடி வழக்கு தீர்ப்பு 13-ல்

சாவகச்சேரி, புதன்

நீர்வேலி வாசிகளான சிலம்புக் கந்தர், சங்கிலி இவர் மகள் ஜெயலட்சுமி ஆகிய இருவரும் ஜெயலட்சுமிக்கு இரு கூப்பன்களைப் பாவித்ததாக கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் கடந்த பல தினங்களாக விசாரணைசெய்யப்பட்டு தீர்ப்புக்காக இம்மாதம் 13-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வெட்டினூராம்: ஒருமாதம் கடூழியம்

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரிகச்சாயைசேர்ந்தகாசித்தம்பிபொன்னையா என்பவர் இவ்வருடம் 25-ம் திகதி வே. சிவானந்தம், ஆ. பேரம்பலம் ஆகிய இருவருக்கும்கிறிஸ்கத்தியால் குத்திகாயம் ஏற்படுத்தியதாகக் குற்றம்சாட்டிசாவகச்சேரிப் பொலிசாரால்தாக்கல் செய்யப்பட்டவழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட்திருசே. விக்னராசா எதிரியைக்குற்றவாளியாகக்கண்டு ஒருமாதக் கடூழியச்சிறைத்தண்டனை விதித்துதீர்ப்பளித்தார்.

## 'திரிசங்கு சுவர்க்கம்'

சுழிபுரம், திங்.

''தனியார் துறையிலிருந்து கல்வி நிலையங்கள் பூரண அரசினர் பள்ளிகளாயின வேயன்றி ஆசிரியர் அரசாங்க ஊழியரன்ருே அல்லது தனியார் துறைஆசிரியஊழியரன்ருே சொல்ல முடியாத வரையறுக்க முடியாத திரிசங்கு சுவர்க்கத்தில் அல்லற்பட்டு ஊசலாடும் நிலையிலுள. இப்பொதுப் பிரச்னை இரண்டுங் கெட்டான் நிலையில் ஆசிரியரை அவஸ்தைக்குள்ளாக்குகிறது ஆசிரிய சமூகம் உழைப்புக்கேற்ற ஊதியம் பெருத தொழிலாளியினமாகப் புறக்கணிக்கப்படுகிறது'' என்று மேற்கு யாழ்ப்பாண ஆசிரிய சங்கத்தின் 37வது ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இ. தி. மு. க. கிளை

கிண்ணியா, திங்கள்

கிண்ணியாவில் திரு. கா. அ. மாணிக்கராசா தலைமையில் இலங்கை தி. மு. க. கிளை அமைக்கப்பட்டது. கீழ்க்கண்டோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

செயலாளர் இரா. துரைராசன், துணைச்செயலாளர்! சி. சிந்தத்துரை, பொருளாளர்: செ. கணேசபிள்ளை, செயற்குழு உறுப்பினர்கள்! செ. வேலாயுதம், அப்துல் பலீல், சி. அருச்சுனன், நா. ஜெலாப்தீன், சி. மகாலிங்கம், நா. சித்திரவேலு.

## தற்கொலை செய்ய முயன்றவர் காப்பாற்றப்பட்டார்

சாவகச்சேரி, புதன்

கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்யமுயன்றவரை கயிற்றை அறுத்துக் காப்பாற்றினூர் ஒருவர்.

இச்சம்பவம் சாவகச்சேரியிலுள்ள மட்டுவில் என்னுமிடத்தில் நடை பெற்றுள்ளது. எஸ். சின்னத்தம்பி என்பவரே தற்கொலை செய்ய முயன்றவராவார். இவர் உடனடியாகச் சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரிக்குஎடுத்துச் செல்லப்பட்டார். இவர் பொலிசாருக்குக் கொடுத்தவாக்கு மூலத்தில் தான்கடந்தசில வருடங்களாக வயிற்றுக்கோளாறினூல் அவஸ்தைப்படுவதாகவும் அதனூலேயே தான் தற்கொலை செய்ய முயன்றதாகவும் தெரிவித்தனர்.

ஹாக்கி

# சென். ஜோன்ஸ் கல்லூரி இரு பிரிவிலும் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற 1-ம், 2-ம் பிரிவுகளுக்கிடையேயான ஹாக்கிப் போட்டிகள் இரண்டிலும் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றியீட்டியது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் முதலில் 1-ம் பிரிவுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டி ஆரம்பத்திலேயே சென். ஜோன்ஸ் கல்லூரி இரு கோல்களை இடைவேளைக்கு முன்னர் போட்டது.

இடைவேளைக்குப் பின்னர் போட்டி மிகவும் காரசாரமான பெரும் மோதலாகக் காணப்பட்டது. இரு சாராரும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் மோதினர். இச்சந்தர்ப்பத்தில் கனகரத்தினம் கோஷ்டியின் பின்னணி வீரர்களின் ஆட்டம் அருமையானது. இப்போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் 2 — 0 கோல்களால் கனகரத்தினம் கோஷ்டியை வென்றது.

இப்போட்டியை அடுத்து 2-ம் பிரிவு ஆட்டம் ஆரம்பமானது. இப்போட்டியில் இடைவேளைக்கு முன்னர் இரு சாராரும் ஆளுக்கு ஒரு கோலை விளாசினர். இடைவேளைக்குப் பின்னர் சென். ஜோன்ஸ் மேலும் ஒரு கோலை போட்டது. எனினும் கனகரத்தினம் கோஷ்டியினர் விட்டுக் கொடுக்காமல் பலமாக மோதி எதிர்க்கோஷ்டியைத் திணறடித்தனர். இப்போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் 2 — 1 கோல்களால் கனகரத்தினம் கோஷ்டியை வென்றது.

## சங்கீத நாட்டிய சங்கம்

கொம்பனித்தெரு, புதன்

அகில இலங்கை சங்கீத நாட்டியசங்கத்தாரின் ஆண்டுப் பொதுக்கூட்டம் சங்கப்பணிமனையில் நடைபெற்றது. அதில் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் எஸ். நடராசா, உபதலைவர்கள்! எம். சுப்பிரமணியம், ஏ. எச். ராஜ்கொட்வல, செயலாளர்: எஸ். மகாலிங்கம், உபசெயலாளர் ஆர். பொன்ராசா, தனூதிகாரி திருமதி எல். செல்வத்துரை, நடனக் காரியதரிசி, திரு. ஈ. இரத்னம், நாடகக்காரியதரிசி: ரி. கந்தசாமி. மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 3 ஆட்டங்களிலும் வெற்றி

வல்வெட்டித்துறை, புதன்

உடுவில் கூல்பார் விளையாட்டுக்கழகத்திற்கும் வதிரி பொம்போஸ் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் மூன்று ஆட்டங்களிலும் கூல்பார் கழகம் வெற்றியீட்டியது. அல்வாய் இந்துவாலிபர் சங்க மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. சிதம்பரநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

## 'கடன் எல்லையை ஒரு லட்சமாக்குக'

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன கடன் நிவர்த்திச் சங்கத்தின் கடன் எல்லையை ஒரு லட்சம் ரூபாவாக அனுமதிக்குமாறு கூட்டுறவு மாகாண வங்கியையும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரையும்கோருவதென்ற தீர்மானமும், மிகுதி இலாபத்திலிருந்து 1000 ரூபாயை பங்கு மாற்று நிதிக்காகவும், 1000 ரூபாயை கட்டடநிதிக்காகவும் ஒதுக்குமாறும் கோரும் தீர்மானமும் இம்மாதம் 14-ம் திகதி நடைபெறவிருக்கும் மேற்படி சங்கத்தின் 11-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்க முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் அன்று மாலை 3 மணிக்கு சங்கத்தலைவர் திரு. எஸ். ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெறவிருக்கின்றது,

[ந. நி.]

## நிதி அன்பளிப்பு

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை ரோட்டரிக் கிளப் கூட்டம் அதன் தலைவர் திரு. வி, செல்லத்தம்பி தலைமையில் நடைபெற்றபோது அண்மையில் நடைபெற்ற கல்முனைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இக் கூட்டத்திற்கு சமூகமளித்த அங்கத்தவர்களிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டு, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆசிய ரோட்டரிக் கிளப் ஸ்தாபகரும் பிரதிநிதியுமான செல்வி தில்லையம்பலத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## மூன்று வருட கடூழியம்

காங்கேசன்துறை, புதன்

சங்கானையைச் சேர்ந்த பொன்னன் இரத்தினம் என்பவரை நாகமுத்து தம்பிபிள்ளை என்பவர் கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாக சங்கானைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

எதிரியான தனது மாமன் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 6-ம் திகதி இரவு 8-40 மணியளவில் தனக்குக் கத்தியால் குத்தியதாக பொன்னன் இரத்தினம் சாட்சியமளித்தார். எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் மத்திய கலவன் வித்தியாசாலை பெற்ருர்—ஆசிரியர்சங்க வருடாந்தக் கூட்டம் தலைமை ஆசிரியர் திரு. மு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகக் கீழ்க்காண்போர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் மு. வேலாயுதபிள்ளை, உப தலைவர்கள்: பொ. தி: சம்பந்தர், சி. சிற்றம்பலம், காரியதரிசி: அ. சுப்பிரமணியம், தனூதிகாரி பே. தம்பையா, நிர்வாகசபை உறுப்பினர்: சி. நடராசா, சி. மாரிமுத்து, ஆ. சுப்பிரமணியம், கை. வேலாயுதபிள்ளை, வி. அப்பாக்குட்டி, ஆ. சதாசிவம், அ. முத்துக்குமாரு, திருமதி வே. இரத்தினம்.


கலங்கள் வேறு....
உள்ளடக்கம் ஒன்றே.




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் சூப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் சூப்பர் குயிங் கிடைக்கும் தான். எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும் போதே பேனவைத் துப்புரவு செய்வதுமாகிய சோல்வ் - எக்ஸ் என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் சூப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




எல்லாப் பேனுக்களுக்கும் சிறந்த மை இதுவே.
மகாராஜா ஒர்கனைசேஷன் லிமிட்டெட், பங்ஸால் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் நிறுத்த யோசனைக்கு...

[1 ம்பக்கத் தொடர்ச்சி]

உதவியளித்ததாகக் குற்றம் சாட்டி பிரிட்டனுடனும் அமெரிக்காவுடனுமுள்ள ராஜீய உறவை ஐக்கிய அரபுக்குடியரசு துண்டித்துக் கொண்டதைத் தொடர்ந்து ஜோர்டான், சிரியா, ஈராக், அல்ஜீரியா, யேமன், சூடான் ஆகிய அரபு நாடுகளும் பிரிட்டன், அமெரிக்காவுடனுன ராஜீய உறவுகளையும் துண்டித்துக் கொள்ளத் தீர்மானித்தன. லெபனுனும் தனது ராஜீய உறவுகளைத் துண்டித்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறது.

அமெரிக்காவில் ஐக்கிய அரபுக் குடியரசின் நலன்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

### ஜப்பான் வரவேற்பு

இஸ்ரேலும் அரபு நாடுகளும் உடனடியாக யுத்தத்தை நிறுத்த வேண்டுமெனக் கோரும் பாதுகாப்புசபைத் தீர்மானத்தை ஜப்பான் வரவேற்றிருக்கிறது.

யுத்த முனைகளில் செய்தி சேகரிக்கச் சென்றுள்ள பல நாட்டுப் பத்திரிகை நிருபர்களில் மூன்று நிருபர்கள் குண்டு வீச்சில் மாண்டனர்.

### பீகிங்கில் ஆர்ப்பாட்டம

சீனத் தலைநகரான பீகிங்கில் அரபு நாடுகளுக்கு ஆதரவு தெரிவித்தும் இஸ்ரேலுக்கும் பிரிட்டன், அமெரிக்காவுக்குக் கண்டனம் தெரிவித்தும் பெருந்தொகையான சீனர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### நியுஸிலந்து யோசனை

மேற்கு ஆசியாவில் உடனடியாக யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்ற ஐ.நா. பாதுகாப்பு சபைத் தீர்மானத்தை நியுஸிலந்துப் பிரதமர் வரவேற்றுர். இஸ்ரேல் - அரபுநாடுகள் பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான நியாயமான தீர்வு காண

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
நாகேஸ்வரராவ்—
அஞ்சலிதேவி
நடித்த
மங்கையின் சபதம

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
கல்யாண பரிசு

REGAL JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
SEAN CONNRY
in
FROM RUSSIA
WITH LOVE

இப்பொழுது நடைபெறுகிறது
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] ஈரேஸ் [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] மொடேர்ன் [பதுளை]
மொடேர்ன் [பண்டாரவளை] விஜிதா [ஹட்டன்] நீவொளி [நுவரெலியா]
கல்யாணி [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் சிவாஜி கணேசன்,
நடிக ராணி கே. ஆர். விஜயா,
ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,
நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்சின்
செல்வம்

## சூயஸ்கால்வாயை.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எகிப்து எல்லைக்குள் இஸ்ரேலியத் துருப்புக்கள் சில நுழைந்ததாக ஒப்புக்கொண்ட ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரிகள், எதிரித் துருப்புக்களை எதிர்த்து அரபுக் குடியரசுப் படைகள் கடுமையான தாக்குதல் நடத்துவதாகவும் இஸ்ரேலியத் துருப்புகள் தொடர்ந்து முன்னேற முடியாதிருப்பதாகவும் தெரிவித்தனர்.

• சினுய் பகுதியில் இஸ்ரேலிய படைகளுடன் ஐக்கிய அரபுக்குடியரசுப்சபடைகள் மிக உக்கிரமான சண்டையிலீடுபட்டிருப்பதாக மற்ருெரு செய்தி கூறுகிறது.

### பெத்லகேமிலும சண்டை

மற்ருெரு போர் முனையான ஜெருசலத்தில் ஜோர்டான் படைகளுக்கும் இஸ்ரேல் படைகளுக்கும் தொடர்ந்து கடும்சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஜோர்டானில் மேலும் இரு நகரங்களைத் தாங்கள் கைப்பற்றியிருப்பதாக இஸ்ரேலிவர் தெரிவித்தனர்.

சிரியா - இஸ்ரேல் எல்லையில் சிரியா எல்லைக்குள் நுழைந்த இரண்டு இஸ்ரேலிய போர் விமானங்களை சிரியா வீரர் சுட்டு வீழ்த்தியதாகவும் ஒரு விமானியைக் கைப்பற்றியிருப்பதாகவும் டமாஸ்கஸ் வானொலி தெரிவித்தது.

---

பெரிய வல்லரசுகள் முன் வந்து முயற்சி செய்ய வேண்டுமென்று அவர் யோசனை தெரிவித்தார்.

இஸ்ரேலுக்குச் சொந்தமான 10 போர் விமானங்களை ஜோர்டான் துருப்புகள் சுட்டுவீழ்த்தியுள்ளதாகவும் சுமார் 500 இஸ்ரேல் போர்வீரர்கள் கொலையுண்டதாகவும் ஜோர்டான் அறிவித்துள்ளது. கொலையுண்ட இஸ்ரேல் போர்வீரர்களின் சடலங்கள் ஜெருசலம் வீதிகளில் சிதறிக்கிடப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

### செங்காவலர் ஆதரவு

பீகிங்கில் ஒரு லட்சம் செங்காவலர்கள் அரபுநாடுகளுக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்திஞர்கள்.

---

## மொரத்தம 8 . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

லுடன் 45 நிமிடங்கள் சம்பாஷித்தார்.

நாஸரின் விசேஷ தூதர், ஆப்கானிஸ்தான் தலைநகரான காவுல் போய்ச் சேர்ந்துள்ளார். நாஸரின் விசேஷ செய்தியொன்றை அவர் ஆப்கானிஸ்தான் அதிபரிடம் கையளித்தார்.

மேற்கு ஆசியாவில் சமாதானத்தை நிலைநிறுத்த யூகோஸ்லேவியாவும், இந்தியாவும் ஒத்துழைக்குமெனத் தாம் நம்புவதாக இந்திய வெளியுறுவு மந்திரி சக்ளா, நேற்றுப்புதுடில்லியில் கூறினுர். ஒய்வுபெறும்யூகோஸ்லேவியத் தூதருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைவைபவமொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சூயஸ்கால்வாய் வழியாக, இந்தியாவுக்கு18000தொன்மா கொண்டுசெல்லும்அமெரிக்கக் கப்பல் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. சூயஸ் கால்வாயூடாகச் செல்லும் கடைசிக்கப்பல் இதுவேயாகும்.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967 ஜூன் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

'இலங்கையில் கூட்டுறவுஇயக்கத்தின் நிலை

# 56 வருடங்களாகியும் வளர்ச்சி இல்லையே'

யாழ்ப்பாணம், வியா.

''இலங்கையில் கூட்டுறவு இயக்கம்வேரூன்றி ஐம்பத்தி ஆறு வருட காலமாகியபோதும் இக்கால எல்லைக்கு வேண்டிய வளர்ச்சியை இயக்கம் அடையவில்லை என்றே கூறவேண்டும். கடந்த வருடத்திலும் இன்று தான் கூட்டுறவு இயக்கம் மிகவும் நெருக்கடியான நிலையிலிருக்கின்றது என்று துணிந்து கூறலாம்.''

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப்பகுதிக் கருத்தரங்கிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு. ஏ. ஜே. இராசதுரைசிங்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்றும், நேற்றுமுன்தினமும் நடைபெற்ற இக்கருத்தரங்கில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அநேக பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கை ஆரம்பித்து வைத்த வடமாகாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம், சபாரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது: யுத்த காலத்தின்போதும், அதன் பின்பும்கூட அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்க அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களை உபயோகித்தது இதனுல் கூட்டுறவுச் சங்கங்கள் ஓரளவுக்குத் தங்கள் அந்தஸ்தை இழந்துள்ளன என்றே குறிப்பிடல்வேண்டும். அரசாங்க அலுவலாளர்களின் மேற்பார்வையில் இச்சங்கங்களிருப்பதால் சங்க உறுப்பினர்கள் தமது பொறுப்புகளை உதாசீனம் செய்கிறுர்கள். ஆனுல் சங்கங்களை மேற்பார்வைசெய்யும் பொறுப்பு சங்க அங்கத்தவர்களாலேயே முடியும் என்பதை எவருமே மறுக்கமுடியாது'' இன்னும் பலரும் பேசினுர்கள். [ந. நி.]

## நிதிமந்திரி...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

சபை மண்டபத்தில் அன்று காலை சங்கத் தலைவர் திரு. வ. பண்டிதர் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு. வன்னிநாயக்கா, திருமதி விமலா கன்னங்கரா ஆகியோர் உட்பட சுகாதார இலாகா அதிபர் திரு. ஹெரத் குணரத்ன, சுகாதார இலாகா நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம எம். பி., திரு. மு. சிவசிதம்பரம் எம். பி., திரு. தா. சிவசிதம்பரம் எம். பி. ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

இக்கூட்டத்தில் 12 பிரேரணைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. [ந. நி.]

---

## உலக நிபுணர் யாழ்நகர்வருவார்

யாழ்ப்பாணம், வியா.

உலகசுகாதாரஸ்தாபனத்தின் புவியியல் ஆராய்ச்சி ஆலோசகர் டாக்டர் மார்ட்டின் கே தற்போது இலங்கைக்கு வந்துள்ளார்.

மாலைதீவில் புவியியல் ஆராய்ச்சி பற்றி ஆலோசனை கூறுவதற்கான ஒப்பந்தமொன்றில் அங்கு விஜயம் செய்த இவர் இலங்கை ஸ்தலஸ்தாபன அமைச்சின் அழைப்பிலேயே இங்கு வந்துள்ளார். டாக்டர் மார்ட்டின் யாழ்ப்பாணத்துக்கும் தீவுப்பகுதிகளுக்கும் விஜயம் செய்வார். இப்பகுதிகளில் நீர் விநியோகம் சம்பந்தமான ஆராய்ச்சியை இவர் நடத்தவிருக்கிறுர். டாக்டர் மார்ட்டினுடன் இலங்கைப் புவியியல் நிபுணரான திரு, சி. எச். ஏ. சிறிமானேயும் இப்பகுதிகளுக்கு விஜயம் செய்வார்.

---

## நோபல் இலக்கிய பரிசுக்கு இந்தியர்

புதுடில்லி, ஜூன் 7

பிரபல பஞ்சாபிய கவிஞரும், பார்லிமெண்ட் அங்கத்தவருமான டாக்டர் கோபால்சிங்கின் பெயர், இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அவரது பெயரைப் பிரேரித்துள்ளவர்களில் ஒருவர் புகழ்பெற்ற அமெரிக்க நாவலாசிரியை பேர்ல் எஸ். பக் ஆவார். 1913ல் உலகப் புகழ்பெற்ற வங்காளக்கவிஞர் ரவீந்திரநாத்தாகூர் முதல்முறையாக நோபல் இலக்கியப் பரிசுபெற்ற இந்தியராவார்.

---

## 25 ஏககர் நிலத்தை மாணவர் திருத்துவர்

யாழ்ப்பாணம், வியா.

நாட்டில் நிலவும் உபஉணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் பொருட்டு அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் விவசாய உற்பத்திக்காக அக்கராயன் குளத்தில் கோணுவில் என்னும் இடத்தில் அரசாங்கம் வழங்கியுள்ள 25 ஏக்கர் நிலத்தையும் வடபகுதி கல்லூரி மாணவர்களைக்கொண்டு சிரமதானம் மூலம் துப்பரபு பண்ண வித்தியாபகுதி முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது, [ந, நி.]

## இவருக்கு முடிவில்லை

உடுவில், புதன்

கொக்குவில் காளி கோவிலடியில் வசிக்கும் திரு. ஆ. அப்புத்துரை சென்ற டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுச் தாரதரப் பத்திர [சாதாரண] பரீட்சை எழுதியிருந்தார். அதன் முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டனவாயினும் திரு. ஆ. அப்புத்துரையின் பரீட்சை முடிவுகள் இன்னும் அவரது கைகளுக்குக் கிடைக்கவில்லையாம். முடிவுகள் வெளியிடப்பட்ட ஓரிரு நாட்களுக்குள் தமது முடிவு அறிவிக்கப்படாததுபற்றி இவர் பரீட்சைப் பகுதியினருக்கு அறிவித்திருந்தார். இதன் பின்னும் ஒரு பதிலும் இல்லாமையால் தந்திமூலம்கூட பரீட்சைப் பகுதியினரைக் கேட்டுக் கொண்டார்.

பரீட்சைப் பகுதியினர் இவரது முடிவுபற்றியோ கடிதம், தந்தி பற்றியோ இதுவரையில் எதுவித பதிலும் கொடுக்கவில்லையாம்.

---

### அமெரிக்கா ஆலோசனை

வாஷிங்டன், ஜூன்.7

எண்ணெய் விநியோகத்தை அரபுநாடுகள் தடை செய்துவிட்டதால் வியட்னுமில் அமெரிக்காவுக்குபாதகமான நிலை ஏற்படலாமென கருதப்படுகிறது. அமெரிக்க அதிகாரிகள் எண்ணெய்க் கம்பனிப் பிரதிநிதிகளுடன் அவசரஆலோசனை நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org